# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2009, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்) 26/2007*

**விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

*"விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று சொல்லப்பட்ட சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றும் நோக்கத்திற்கென இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களைக் கொண்டுநடாத்தியும் நிறைவேற்றியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக இருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1***. இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

***2***. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கத்தின் தங்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தகைய ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "விலங்குகளுக்குக் கொடுமையிழைத் தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம்" என்ற பெயரின்கீழும்

2-PL 003824 -1,020 (2009/04)

மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராகவும் வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) விலங்குகளைப் பாதுகாப்பதற்கான தேவை பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் ;

(ஆ) விலங்குகளை கைவிடல் அல்லது அவற்றுக்கு அவசியமற்ற நோவு அல்லது துன்பத்தை, விளைவிப்பதிலிருந்து தடுப்பதன் தேவைபற்றி மக்களுக்கு அறிவூட்டல் ;

(இ) விலங்கினங்களைப் பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தலும், அத்துடன் அவற்றைப் பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் ;

(ஈ) வீட்டு விலங்கினங்களுக்கான சிறந்த சூழலை உருவாக்குவதுடன் அவற்றுக்கு பாதுகாப்பை ஏற்பாடு செய்தல் ;

(உ) பிணியுள்ள விலங்குகளுக்கு உள்ளக, வெளிவாரி மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடுசெய்தல் ; அத்துடன்

(ஊ) விலங்குகளுக்கு அன்பும் இரக்கமும்காட்டும்படி பொதுமக்களைத் தூண்டுதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வளங்களிலிருந்து காசாக அல்லது பொருளாக கொடைகள், நன்கொடைகள் அல்லது அன்பளிப்புகளைப் பெறுதல் ;

(ஆ) வங்கிக்கணக்குகளைத் திறத்தல், பேணுதல், செயற்படுத்தல் மற்றும் மூடிவிடுதல் அத்துடன் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணத்தை கடனெடுத்தல் அல்லது சேகரித்தல் ;

(இ) நிருவாகக் குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்புகளில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பணங்களை முதலிடுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைக் கொண்டு நடாத்துகின்ற நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலிலமர்த்தல், ஊதியமளித்தல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகித்தல் மற்றும் வேலைநீக்குதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் அதே குறிக்கோளையொத்தவற்றைக்கொண்ட ஏனைய கழகங்கள், சங்கங்கள் அல்லது ஒழுங்கமைப்புக்கள் என்பவற்றுடன் ஒத்துழைத்துச் சேர்ந்துகொள்ளுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக பொருட்காட்சிகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், மாநாடுகள் என்பவற்றை மேம்படுத்துதல், ஒழுங்குபடுத்தல் அத்துடன் நடாத்துதல் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய செயல்களையும் காரியங்களையும் செய்தல் ;

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (*1*) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவாக, போஷகர்கள், தலைவர், இரு துணைத்தலைவர்கள், பொதுச் செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள், அத்துடன் அத்தகைய விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு, அவற்றுக் கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமான பன்னிரண்டுக் குக் குறையாத ஏனைய உறுப்பினர்கள் என்போரைக் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப் படுதல் வேண்டும்.

(*2*) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழு, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும். அவர்கள் புதிய நிறைவேற்றுக்குழு கூட்டுத்தாபனத்தின் விதிகளின்கீழ் நியமிக்கப்படும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

*நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.*

**6.** (*1*) கூட்டுத்தாபனத்தினது ஆதனத்தின் முகாமைக் கான தத்துவம் உரித்தாக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை யொன்று இருத்தல் வேண்டும்.

(*2*) கூட்டுத்தாபனத்தினது முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவிவகிக்கும் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையாதல் வேண்டும். அவர்கள் புதிய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் விதி களின்கீழ் நியமிக்கப்படும்வரை பதவி வகித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (*1*) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் எல்லாக் காரியங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு

ஒவ்வாதவையாகவுமிராத விதிகளைக் கூட்டுத்தாபனம் காலத் திற்குக்காலம் ஆக்குதல் சட்டமுறையான தாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கம், அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல் மீளப்பெறல் அல்லது அவர்களை வெளியேற்றுதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர் பதவியிலிருந்து பதவிதுறத்தல் அல்லது அதிலிருந்து பதவிவறிதாக்கல் அல்லது அகற்றுதல் என்பனவும் அவர்களது தத்துவங்கள், ஒழுக்கம் அத்துடன் கடமைகள் ;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தலும் அதன் தத்துவங்கள் ஒழுக்கம் அத்துடன் கடமைகள் என்பனவும் அத்தகைய உறுப்பினர்களின் பதவிக் காலங்களும் ;

(ஈ) நம்பிக்கைப்பொறுப்புச் சபையின் நம்பிக்கையாளர்களைத் தேர்ந்தெடுத்தலும் அதன் தத்துவங்கள், ஒழுக்கங்கள், அத்துடன் கடமை என்பனவும் அத்தகைய நம்பிக்கையாளரின் பதவிக்காலங்களும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், அத்துடன் சேவையாளர்கள் என்போரின் தத்துவங்கள், ஒழுக்கம், கடமைகள் அத்துடன் பணிகள் ;

(ஊ) முகாமைக்குழுக் கூட்டங்களைக் கூட்டுதல் அத்துடன் நடாத்துதல் என்பவற்றில் அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, அத்தகைய கூட்டங்களின் நேரங்கள், இடங்கள் அறிவித்தல் அத்துடன் அவற்றின் நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண் அத்துடன் அங்கு அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் நிதியங்களின் கட்டுக்காப்பும் அத்துடன் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(ஏ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதி எதுவும் இப் பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற் போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத் தப்படலாம் மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினரும் கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியங்கள்.*

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள், இறுதிவிருப் பாவணக்கையுதிர்ப்பு, மாற்றல், நன்கொடைகள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்கள் என்பன வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், முகாமைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தின் புனரமைப்பு, அதன் அபிவிருத்தி அல்லது திருத்தப்பாடு என்பவற்றின் நோக் கத்திற்காகக் கூட்டுத்தாபனம் ஒரு தேய்மான நிதியத்தை அல்லது ஆழ்நிதியமொன்றைத் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் வருமதியானவையும் அதனால் கொடுபடற் பாலனவுமான தனிசுகள்.*

**9.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று இருந்த சங்கத்தின் எல்லாத் தனிசுகளும் அத்துடன் பொறுப்புக்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப் படுதலும் கொடுத்துத்தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் அதற்குச் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாப னத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கணக்காய்வுகளும், கணக்குகளும்.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம், மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறை யான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**11.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலாலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆவணங்களும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர் அத்துடன் பொதுச்செயலாளர் அல்லது பொருளாளர் என்போரின் முன்னிலையிலுமன்றி எத்தகையதுமான எச்சாதனத்திலும் இடப்படுதலாகாது. அவர்கள் சமுகமாக இருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்கள் பெயரை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடல் சாட்சிக்காரராக எவரேனும் ஆள் ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைத்தலின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. அத்தகைய ஆதனங்கள், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக்கொண்ட நிறுவனங்கள் அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறெவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படலாம் அல்லது கையளிக்கப்படலாம், அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் கலைப்பின்போது அல்லது கலைப்புக்கு உடன்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ, பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு *05* என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்